IN THE COURT OF THE DISTRICT MUNSIF OF ARAKKONAM

O.S.NO. 38/2021

Deposition of Witness : PW-2

Name : பாபு

Father's Name /W/o : த/பெ. பாண்டியராஜன்

Religion : இந்து

Caste : -

Calling : -

Address : மோசூர் கிராமம், அரக்கோணம் வட்டம்

Solemnly affirmation accordance with the provision of Act X 1873 on the day 11.03.2024

குறுக்கு விசாரணை:

1. இந்த வழக்கு எந்த சர்வே எண்ணிற்கு போடப்பட்டது என்றால் சர்வே எண்.882/8 தாக்கல் செய்யப்பட்டது. சர்வே எண்.882/8 மொத்த விஸ்தீரம் என்ன என்றால் 2260 சதுர அடி. அதில் எனக்கு எவ்வளவு பாத்தியப்பட்டது என்றால் 1360 சதுர அடி. 1360 சதுர அடிக்கு வழக்கு போட்டுள்ளேனா அல்லது 2260 சதுர அடிக்கு வழக்கு போட்டுள்ளேனா என்றால் முன் பக்கம் உள்ள சொத்திற்கு போட்டுள்ளேன். 2260 சதுர அடியில் எந்த பக்கத்தில் பிரச்சனை என்றால் முன்பக்கம் பிரச்சனை. முன்பக்கம் எந்த திசையில் உள்ளது என்றால் தெற்கு பக்கத்தில் உள்ளது. தெற்கு பக்கத்தில் எத்தனை செண்ட் நிலம் உள்ளது என்றால் மொத்தம் 40 செண்ட் இருக்கும். வழக்கு 40 செண்ட் ற்கு போட்டுள்ளேனா அல்லது 2260 சதுர அடிக்கு போட்டுள்ளேனா அல்லது 1360 சதுர அடிக்கு போட்டுள்ளேனா என்றால் அளவுகள் என் அப்பாவிற்கு தான் தெரியும். நான் வழக்கு 5 செண்டிற்கு தான் போட்டுள்ளேன் என்றால் எனக்கு அளவு தெரியவில்லை. சொத்தின்

செக்குபந்தி தெரியுமா என்றால் எனக்கு திசை தெரியவில்லை.

2. சொத்து எனக்கு எப்படி வந்தது என்று தெரியுமா என்றால் என் தந்தைக்கு அவர் பெரியம்மா கொடுத்தது. என்ன சர்வே எண்ணிற்கு கொடுத்தது என்றால் சர்வே எண்.882/8. என் வழக்கில் நான் 3 வது பத்தியில் சர்வே எண்.596/3 தான் முத்தம்மாளுக்கு சொந்தமானது என்று சொல்லியுள்ளேன் என்றால் அதைப்பற்றி தெரியவில்லை. சொத்து விவரத்தில் சர்வே எண்.882/8 குறிப்பிட்டுள்ளேன் என்றாலும் இதில் எது சரியானது என்றால் சர்வே எண்.882/8 மட்டும் தான் எனக்கு தெரியும். சர்வே எண்.882/8 முத்தம்மாளுக்கு பாத்தியப்பட்ட சொத்து என்று எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. என் அப்பாவிற்குதான் தெரியும். நீதிமன்றத்திற்கு எதற்கு சாட்சி சொல்ல வந்துள்ளேன் என்றால் நாங்கள் இருக்கும் மனையை அவர்கள் உடையது என்று சொல்கிறார்கள் அதனால் வந்துள்ளேன். சொத்தில் எங்களுடையது என்று வரவில்லையா என்றால் சொத்து எங்களுடையதுதான். சர்வே எண்.882/8 யாருக்கு பாத்தியப்பட்டது என்று ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் முத்தம்மாள் சொத்து தான் ஆவணம் பற்றி தெரியாது.

3. யாருடைய சொத்து என்று வில்லங்கம் போட்டு பார்த்துள்ளேனா என்றால் பார்த்தேன். அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் சொல்வதுபோல் வில்லங்கம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. சர்வே எண்.882/8 குறித்து என் தந்தை எனக்கு என்ன செய்தார் என்றால் செட்டில் மெண்ட் பத்திரம் செய்தார். எந்த தேதியில் எழுதிக்கொடுத்தார் என்றால் தேதி தெரியவில்லை. அந்த தான செட்டில்மெண்ட் பத்திரத்தை நான் பார்த்தேனா என்றால் பார்த்தேன். அதில் சொத்து தனக்கு எப்படி வந்தது என்று எழுதியுள்ளாரா என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. செட்டில்மெண்ட் தேதி தெரியுமா என்றால்

2006 என்று நினைக்கிறேன். நான் சொல்வதுபோல் 2006 ல் எந்த பத்திரமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்பட்டும் வா.சா.ஆ.5 எனக்கு கொடுக்கப்பட்ட தான செட்டில்மெண்ட் பத்திரமா என்றால் ஆம். இதில் எத்தனை சதுர அடி போடப்பட்டுள்ளது என்றால் 2070 சதுர அடி என்று உள்ளது. வழக்கு சொத்து விவரத்தில் எத்தனை சதுர அடி உள்ளது என்றால் 2260 சதுர அடி என்று உள்ளது. வா.சா.ஆ.5 ல் கண்டுள்ள சொத்து விவரம் சரியா அல்லது சொத்து விவரத்தில் உள்ளது சரியா என்றால் அந்த விவரங்கள் என் தந்தைக்கு தான் தெரியும். வா.சா.ஆ.5 ல் உள்ள செக்குபந்தி தான் சொத்து விவரம் கொடுக்கப்பட்டுள்ளதா என்றால் அதைப்பற்றி என் தந்தைக்கு தான் தெரியும். சொத்து எனக்கு பாத்தியப்பட்டது இல்லை என்றால் சரியல்ல. எனக்கு பாத்தியப்பட்டது தான்.

4. சொத்து ஆதியில் எல்லப்பரெட்டி மனைவி கன்னியம்மாளுக்கு பாத்தியப்பட்டது என்றால் இல்லை முத்தம்மாளுக்கு பாத்தியப்பட்டது. சொத்து 1898 ல் கன்னியம்மாள் கிரையம் வாங்கிய சொத்து என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. தாவா சொத்து எனக்கோ என் தந்தைக்கோ முத்தம்மாளுக்கோ பாத்தியப்பட்ட சொத்து இல்லை என்றால் என் தந்தை காலம் முதல் அங்குதான் உள்ளோம். சொத்து முத்தம்மாளுக்கும் எனக்கும் எந்த உரிமையும் இல்லை என்றாலும் முத்தம்மாள் என் தந்தைக்கு எந்த உயிலும் எழுதவில்லை என்றால் என் தந்தைக்கு தான் தெரியும். எனக்கு சொத்து விவரமும் தெரியாமல் பொய்யாக வழக்கு போட்டுள்ளேன் என்றால் சரியல்ல. தாவா சொத்து சொக்கலிங்கம், சுந்தரவதனம் வகையுறாவுக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றால் இல்லை எங்கள் சொத்து. அவர்கள் சொத்தை தான் எங்கள் சொத்து என்று உரிமை கொண்டாடுகிறோம் என்றால் சரியல்ல. எங்கள் மனையை தான் அவர்கள் மனை என்று

சொல்கிறார்கள். என் தந்தைக்கு உரிமை இல்லாமல் தவறாக பட்டா வாங்கியுள்ளோம் என்றால் அரசாங்கம் தான் தானாக பட்டா கொடுத்தார்கள். நாங்கள் வாங்கவில்லை. 3 வது பத்தியில் உள்ள சொத்திற்கும் வழக்கு சொத்திற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. என் தம்பியை வழக்கில் சேர்க்காததால் வழக்கு நிலைக்கதக்கதல்ல என்றால் அவருக்கு கண் பார்வை இல்லை என்பதால் சேர்க்கவில்லை. 900 சதுர அடிக்கு பரிகாரம் கேட்கவில்லை என்றால் அப்பாவிற்கு தான் தெரியும். பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தாவா தள்ளுபடி ஆகவேண்டும் என்றால் சரியல்ல.